# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8083316

1. District மாவட்டம்: பெரம்பலூர் PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு: 2024 FIR No மு.த.அ. எண்: 01/24 Date நாள்: 12.3.2024

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: CORRUPTION ACT 1988 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (as amended in 2018) Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.02.2024 Date to : நாள் வரை 12.03.2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.03.2024 Time : நேரம் 08.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 KM தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி பெரம்பலூர் மாவட்டம் மாற்றுத் திறனாளிகள் அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ரவி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 39/2024 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 20, அம்பேத்கார் நகர், அன்னமங்கலம் கிராமம் வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
[illegible] 07 மாற்றுத்திறனாளி அலுவலகம் பெரம்பலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

12.03.2024-ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது M.ரவி என்பவர் என் முன் ஆஜராகி கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று புகாரின் தன்மையும் புகார்தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகாரின் சாரம் பின்வருமாறு உள்ளது. அனுப்புநர்: மு.ரவி, வயது 39/2024, த/பெ முத்துசாமி, (மாற்றுத்திறனாளி), 250.அம்பேத்கார் நகர், பில்லாங்குளம் கிராமம், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம் பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, பெரம்பலூர் மாவட்டம். மதிப்பிற்குறிய அம்மா, நான் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பில்லாங்குளம் கிராமம், 250 அம்பேத்கார் தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். தையல் இயந்திரம் வைத்து சுயதொழில் செய்து வருகிறேன்.

(Separate Sheet Enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு M.ரவி

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.03.2024 / 13.10

Name: பெயர் SIVADAYALAN...
Rank: நிலை INSPECTOR OF POLICE VAC PBR ...................... No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

மேலும் 80, சதவீதம் மாற்றுத்திறனாளியான நான் பில்லாங்குளம் பஞ்சாயத்து 4-வது வார்டு உறுப்பினராக இருந்து வருகிறேன். எனக்கு இரு கால்களும் பாதிப்படைந்துள்ளதால் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் இலவச மாற்றுத்திறனாளிக்கான இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தின் மூலம் மேற்கண்ட ஸ்கூட்டரை பெறுவதற்காக பெரம்பலூர் மாற்று திறனாளிகள் நலத்துறையில் உதவி உபகரணங்கள் பெறுவதற்கான விண்ணப்பத்துடன், ஆதார் கார்டு, மருத்துவ சான்றிதழ், புகைப்படம் மற்றும் பணிச்சான்று ஆகியவைகளை இணைத்து நான் ஏற்கனவே விண்ணப்பித்திருந்தேன். இந்நிலையில் மேற்படி இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட வாகனம் பெறுவது தொடர்பாக 01.02.2024-ம் தேதியன்று பெரம்பலூர் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலகத்திற்கு சென்று OT சார் பிரபு விசாரித்தபோது உங்களுக்கு மேற்படி திட்டத்தில் வாகனம் கொடுக்ககுனும்மனா ரூபாய் 2000/- பணம் லஞ்சமாக கொடுத்து என்னை கவனிக்க வேண்டும் என்று சொன்னார். மேலும் பணத்தை கொடுத்துட்டு வாகனத்தை வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். எனக்கு அவர் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்க மனமில்லாததால் தயங்கி கொண்டிருந்தேன். அதற்கு பிரபு என்னப்பா நான் தான் சொல்லிடேன்ல பணத்தோட வாங்கன்னு சொன்னார். அதற்கு சார் என்கிட்ட போய் கேட்கிறீங்களே என்னால உடனே கொடுக்க முடியாது சார் நீங்க பார்த்து பண்ணி கொடுங்க சார்ன்னு சொன்னதுக்கு வேண்டுமென்றால் முதல்ல வண்டிய வாங்கிகங்க அப்புறமா என்னிடம் வந்து கட்டாயமா நான் கேட்ட ரூ2000/- பணத்தை கொடுங்கன்னு சொன்னார் அதற்கு நான் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்நிலையில் (06.03.2024)—ம் தேதியன்று துறையூர் ரோட்டில் உள்ள தனலெட்சுமி சீனிவாசன் கல்லூரியில் நடந்த அரசு விழாவில் எனக்கு இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. அரசு விழாவானது முடிவுற்ற நிலையில் மேற்படி அலுவலரான OT சார் அவரை தனது அலுவலகத்தில் விட்டு விடுமாறு சொல்லி எனக்கு வழங்கப்பட்ட இருசக்கர வாகனத்தில் அமர்ந்தவரை, நான் அழைத்து கொண்டு அவரது அலுவலகத்தில் இறக்கிவிடும் போது நான் கேட்ட ரூபாய் 2000/- பணத்தை சீக்கிரமா கொடுத்தீங்கன்னா உங்கள் புத்தகங்களை என்னிடமிருந்து வாங்கி கொள்ளலாம் என்று கூறினார். நானும் மனமில்லாமல் சரிங்க சார் என கூறினேன். இந்நிலையில் 11.03.2024-ந் தேதியான நேற்று இரவு சுமார் 07.30 மணியளவில் OT சாருக்கு ∴போன் செய்து எனது புத்தகம் தொடர்பாக கேட்டதற்கு அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூபாய் 2000/- கொடுத்துவிட்டு எதுவாக இருந்தாலும் போசுப்பா என்று சொல்லிவிட்டு போனை துண்டித்தார். எனக்கு மேற்படி பிரபு அவர்கள் கேட்ட பணத்தை லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லாததாலும் 2000/- பணத்தை எடுத்து கொண்டு 12.03.2024 ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் பெரம்பலூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து என்னிடம் அரசு உதவி உபகரணங்கள் கொடுப்பதற்காக லஞ்சம் கேட்ட திரு.பிரபு என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (கையொப்பம்) xxxxx M.ரவி, 12.03.2024,

Submitted, Sir, Received this written complaint from the complainant on 12.03.2024 at 09.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 12.03.2024 at 12.00 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) S.Vijayalakshmi., Inspector of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

12/03/2024
INSPECTOR OF POLICE
VEAC
PERAMBALUR.